

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | ஜனவரி 16, 2020 | புரட்சி 19 | முழக்கம் 01 | விலை: ரூ.3.00


## விடுதலை இராசேந்திரன் விளக்க உரை

# மதத்தின் அடிப்படையில் மக்களைக் கூறுபோடவே, குடியுரிமைச் சட்டங்கள்

*குடியுரிமைத் திருத்தச் சட்டம் – குடியுரிமை பதிவேடு – தேசிய மக்கள் தொகைப் பதிவேடுகளில் பா.ஜ.க. ஆட்சி அவசரம் காட்டுவது ஏன்? என்பதை விளக்கி ஜனவரி 4, 2020 அன்று, சென்னை தலைமைக் கழகத்தில் நடந்த 'நிமிர்வோம்' வாசகர் வட்டத்தில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரை யாற்றினார். அவரது உரையிலிருந்து:*

நாட்டில் இப்போது பெரிய விவாதத்திற்கு உள்ளாகியிருக்கிற பிரச்சனை, குடியுரிமைத் திருத்தச் சட்டப் பிரச்சனை. இந்தப் பிரச்சனை குறித்து, இந்த திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள்; இந்த சட்ட திருத்தத்தைப் பற்றி எதுவும் புரிந்து கொள்ளாமலே, இதனால் இந்தியாவில் உள்ள மக்களுக்கு ஆபத்து வரப்போகிறது என்ற பொய்யான ஒரு பிரச்சாரத்தை செய்து கொண்டு இருக்கிறார்கள். என்று பாரதிய ஜனதா தரப்பில் வாதாடப்படுகிறது. மற்றொரு பக்கம் இந்த சட்டம் மதத்தின் அடிப்படையில் நாட்டை பிளவுபடுத்துகிற மிகப்பெரிய ஆபத்தை இழைத்துக் கொண்டிருக்கிறது என்று வெகுமக்கள், மாணவர்கள், இளைஞர்கள், கலைஞர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் போராடுகிறார்கள். உண்மையிலேயே இந்தப் பிரச்சனைகளைப் பற்றி புரிந்து கொள்ளாமல் தான் இந்தப் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கிறதா? என்பது ஒரு அடிப்படையான கேள்வி. இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கிறவர்கள் மிகச் சிறந்த ஆய்வாளர்கள், மிகச் சிறந்த சிந்தனையாளர்கள், முன்னாள் நீதிபதிகள், சட்ட நிபுணர்கள் இவர்கள் அத்தனை பேரும் இந்த சட்டத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள் என்று சொன்னால், அவர்களும் இந்தப் பிரச்சனையைப் பற்றி புரிந்து கொள்ளாத மடையர்களாக இருக்கிறார்களா? இது ஒரு கேள்வி. இரண்டாவது இந்த சட்டம் அமலுக்கு வந்த பிறகு ஜப்பான் நாட்டு பிரதமர், இந்திய நாட்டு பிரதமருடனான சந்திப்பு இரத்து செய்யப்பட்டிருக்கிறது. வங்கதேசத்திலிருந்து இந்தியாவிற்கு வருகை தர இருந்த இரண்டு அமைச்சர்களின் வருகை இரத்து செய்யப்பட்டிருக்கிறது. அய்க்கிய நாடுகளின் சபைகளில் மனித உரிமையைப் பற்றி பேசவல்ல அதிகாரி ஒருவர் இது மிக மோசமான, நாட்டை கூறு போடுகிற சட்டம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். 16 நாடுகளைச் சேர்ந்த தூதர்கள் இந்த சட்டம் கொண்டு வருவது இந்தியாவினுடைய வளர்ச்சிக்கு, மேன்மைக்கு உகந்தது அல்ல, இந்தியா மதத்தினூடான ஆட்சிக்கு சென்று கொண்டிருக்கிறது என்று தங்களுடைய எதிர்ப்பை இந்திய தூதரகங்களிடம் தெரிவித்திருக்கின்றனர். இந்தியாவில் இருக்கிற வெகு மக்களைத் தாண்டி சர்வதேச அளவிலும் இந்த சட்டம் எதிர்க்கப்பட வேண்டிய சட்டம், ஒழிக்கப்பட வேண்டிய சட்டம் என்ற கருத்து மேலோங்கியிருக்கிற இந்த நேரத்தில், இந்த சட்டத்தைப் புரியாமல் எதிர்க்கிறார்கள், புரியாமல் பேசுகிறார்கள் என்று சொல்லி இந்த சட்டத்திற்கு ஆதரவாக நாங்கள் பேரணி நடத்துகிறோம் , இந்த சட்டத்திற்கு ஆதரவாக போராட்டம் நடத்துவோம் என்று பாரதிய ஜனதா கட்சியினர் எதிர்வினைகளை ஆற்றிக் கொண்டிருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக சில நிமிடங்களில் இந்தப் பிரச்சனையினுடைய மய்யக் கருத்து என்ன என்பதை நான் சுருக்கமாக கூற ஆசைப்படுகின்றேன். மூன்று சொல்லாடல்கள் இதில் சொல்லப்பட்டு வருகின்றன, ஒன்று குடியுரிமை திருத்தச் சட்டம், இரண்டு குடியுரிமைப் பதிவேடு, மூன்றாவது மக்கள் தொகைப் பதிவேடு. இந்த மூன்றும் தான் இந்தப் பிரச்சனைகளில் மய்யமாக பேசப்பட்டு வருகின்றன. இந்தப் பிரச்சனை எதிலிருந்து தொடங்குகிறது?

அசாம் மாநிலத்தில் முதன் முதலாக தங்களுக்கான ஒரு பதிவேடு வேண்டும் என்று ஒரு கோரிக்கையை முன்வைத்து அசாமில் உள்ள மாணவர்கள் மிகப் பெரிய ஒரு போராட்டத்தை அசாமில் நடத்தினார்கள். ஏன் அவர்கள் அந்தப் போராட்டத்தை அசாமில் நடத்த வேண்டிய அவசியம் வந்தது? பங்களாதேஷ் யுத்தம் நடந்த நேரத்தில், பங்களாதேஷ்





நாட்டிலிருந்து பக்கத்தில் உள்ள அசாமிற்கு ஒரு கோடி மக்கள் அகதிகளாக வந்தார்கள். ஒரு கோடி பேர் அகதிகளாக வந்த போது, அசாமில் மக்கள் பிரச்சனைகள் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகின. அந்த ஒரு கோடி பேரில் பெரும்பாலானவர்கள் யுத்தம் முடிந்த பிறகு திரும்பிப் போய் விட்டார்கள். அப்படி இந்தியாவிற்கு அகதிகளாக வந்தவர்களுக்கு கூட அன்றைக்கு பிரதமராக இருந்த இந்திரா காந்தி 'நாம் அவர்களை விட்டுவிடக் கூடாது அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்' என்று அஞ்சல் தலையில் கூடுதலாக அய்ந்து காசுகள் ஒட்ட வைத்து , அதில் வருகிற வருவாயை அகதிகளாக வந்தவர்களுக்கு பயன்படுத்தினார். பிறகு திரும்பிப் போய் விட்டார்கள். திரும்பிப் போன பிறகும் அசாமில் தங்கி விட்டவர்களின் எண்ணிக்கை கணிசமாக இருந்து கொண்டே வந்தது. ஆக அசாம் மக்கள், எங்கள் மாநிலத்தில் பங்களாதேஷிலிருந்து வந்த உரிய ஆவணங்கள் இல்லாமல் சட்ட விரோதமாக குடியேறியவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எங்களுடைய அசாம் அடையாளத்தை அழித்துக் கொண்டிருக்கிறார்கள், எங்களுடைய வாழ்வாதாரத்தை அழித்துக் கொண்டிருக்கிறார்கள் எனவே அவர்களை இங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற போராட்டம் அசாம் மாணவர் போராட்டம், 1979இல் தொடங்கியது.

அதைத் தொடர்ந்து போராடிய அனைத்து அசாம் மாணவர் சங்கத்துக்கும் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையே 1985ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி ஒரு உடன்பாடு உருவானது. போராட்டத்தில் 855 பேர் உயிர்ப் பலியானார்கள். அசாம் ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்காக ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட அடுத்த ஆண்டு 1986இல், 1955ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தில் முதல் திருத்தம் கொண்டு வரப்பட்டது. 1971ஆம் ஆண்டு மார்ச் 25க்குப் பிறகு அசாமில் குடியேறிய வங்கதேசத்தவரை அடையாளம் கண்டு வெளியேற்ற வேண்டும் என்பது ஒப்பந்தம்.

இதற்கு மற்றொரு பின்னணியை நாம் கூற வேண்டுமானால், அசாம் மாநிலத்தைப் பொருத்தவரை, அம்மாநிலத்தில் தேயிலைத் தொழில், பெட்ரோல் எடுக்கும் தொழில் மற்றும் காட்டு விலங்குகளான யானைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே அந்த பகுதிக்கான 'கிழக்கு வங்காள பாதுகாப்புச் சட்டம்' என்ற ஒரு சட்டத்தை ஏற்படுத்தி அனுமதி இல்லாமல் அந்த மாநிலத்திற்குள் யாரும் நுழையக் கூடாது என்ற ஒரு பாதுகாப்பை அசாம் மாநிலத்திற்கு உருவாக்கினார்கள். அசாம் மாநிலத்தில் மட்டுமல்லாமல் வடகிழக்கு மாநிலங்களான, திரிபுரா, மேகாலயா போன்ற மாநிலங்களிலும், அங்கே வாழ்கின்ற மக்களில் பழங்குடியின மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்கின்ற காரணத்தினால் அவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக அந்த மாநிலத்தில் நுழைகிறவர்கள் அந்த மாநில அரசின் உரிய அனுமதி பெற்றுதான் நுழைய வேண்டும். Inner line passport என்ற முறையை பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே உருவாக்கி வைத்திருக்கிறார்கள். பழங்குடியின பாதுகாப்பிற்காக சில சுயாட்சி பிரதேசங்களையும் உருவாக்கி வைத்திருக் கிறார்கள். எல்லைக்கோடு பகுதிகளாக இருக்கிற இந்த வடகிழக்கு மாநிலங்களில் பிற நாட்டினருடைய ஊடுறுவல் அதிகமாக இருக்கிறது என்ற நிலையில் அவர்களின் எல்லையைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு வந்தது.

அசாம் ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள், கிருத்துவர்கள் ஆகியோர் மட்டும் வெளியேற்றப்பட வேண்டும்; இந்துக்கள் குடியுரிமை பெறலாம் என்று எந்தப் பிரிவும் கிடையாது. மற்றபடி, அசாம் மாநில மக்கள் தங்களின் கலாச்சாரம், நில உரிமை, மொழிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில் போராடினார்கள். பங்களாதேஷ் நாட்டிலிருந்து வந்தவர்களில் இந்துக்களும் அதிகம் வந்தார்கள் ஆனால் அவர்கள் வங்காளம் பேசுகின்ற இந்துக்கள். அசாம் மக்களைப் பொறுத்தவரை, வந்தவர்கள் இந்துவாக இருந்தாலும் அவர்கள் பேசும் மொழி வேறு, எங்கள் அசாம் மொழி வேறு மதத்தின் அடிப்படையில் அவர்களுடன் சேர்ந்து வாழ முடியாது எனவே வெளியில் இருந்து வந்தவர்கள் அனைவரும் அன்னியர்கள் என்று கூறி அவர்களை வெளியேற்ற வேண்டும் என்பது தான் அசாம் மக்களின் கோரிக்கை. ஒப்பந்தப்படி அதற்கான பட்டியல் தயாரிப்புப் பணிகள் தொடங்கப்பட்டன. உரிய ஆவணங்கள் இன்றி சட்டவிரோதமாக குடியேறியவர்களின் எண்ணிக்கை 16 இலட்சம் என்று கணக்கிடப்பட்டது. அந்த 16 இலட்சம் பேரில் 9 இலட்சம் பேர் இந்துக்கள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மற்றவர்கள் இஸ்லாமியர்களாக இருந்தார்கள். இவை, அசாம் மாநிலத்தில் ஏன் குடியுரிமை வேண்டும் என்று போராடினார்கள் என்பதற்கான பின்னணி. அந்த அடிப்படையில் இந்த அசாமில் யார் யார் குடிமக்கள், யார் யார்


(3ஆம் பக்கம்)


## இஸ்லாமியருக்கு குடியுரிமை தரக் கூடாது என்பதே ஆர்.எஸ்.எஸ். கொள்கை

பா.ஜ.க. நடுவண் ஆட்சி கொண்டு வந்துள்ள குடியுரிமை சட்டங்களுக்குப் பின்னால் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனிய கருத் தியல் இருக்கிறது. ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு தத்துவத்தை உருவாக்கித் தந்தவரும் அந்த அமைப்புக்கு தலைமை யேற்று வழி நடத்தியவருமான சித்பவன் பார்ப்பனர் வலியுறுத்திய கருத்து தான் இந்த சட்டங் களுக்கான பின்னணி.

"இந்துஸ்தானில் வாழக்கூடிய அனைவரும் இந்துக்கள். அவர்களுக்கான இனத்தின் அடையாளம் இந்தியர் அல்ல; இந்து என்பது தான். இந்து மதத்தைச் சாராத பிற மதத்தினர் அனைவரும் அன்னியர்கள். அவர்கள் இந்துஸ்தான் என்ற பாரத தேசத்தில் வாழ வேண்டுமானால் இந்து கலாச்சாரத்தை மதிக்க வேண்டும்; அதற்கு அடிபணிய வேண்டும். இந்துக்கள் அல்லாத பிற மத அன்னியர்கள் தங்களுக்கான தனித்த அடை யாளங்களை இழந்துவிட வேண்டும். இந்துக்கள் பெருமையை மட்டுமே பேச வேண்டும். இதை ஏற்க மறுக்கும் இந்துக்கள் அல்லாத வர்களுக்கு 'குடியுரிமை' கூட வழங்கக் கூடாது என்று கோல்வாக்கர் – "நாம் அல்லது நமக்கான தேசத்தின் வரையறை (We or our nationhood defined) என்ற நூலில் இப்படிப் பதிவு செய்திருக்கிறார்.

"The foreign races of Hindustan must either adopt the Hindu Culture and language; must learn to respect and hold in reverance Hindu Religion" என்று எழுதியதோடு அவர்கள் தங்களுக்கான தனி அடையாள உரிமைகளை இழந்தே தீரவேண்டும் (They must lose their seperate existance) என்று அந்த நூலில் எழுதியிருக்கிறார். அவர்கள் தங்களுக்கான உரிமைகளையோ, முன்னுரிமையோ கோர முடியாது என்பதோடு குடியுரிமை கோரவும் உரிமை இல்லை. (They may stay in the country, wholly subordinated to the Hindu Nation, claiming nothing, deserving no privileges; far less any preferential treatment - **not even citizen's rights**) (மேற்குறிப்பிட்ட நூலின் பக்கம் 47-48)

இஸ்லாமியர்களுக்கு குடியுரிமை கூட வழங்கக் கூடாது என்ற ஆர்.எஸ்.எஸ். பிதாமகர் கோல்வாக்கர் கருத்துக்கு தரப்பட்டுள்ள சட்ட வடிவம்தான் குடியுரிமை திருத்தச் சட்டம்.

## கடவுளுக்கு மருத்துவ ‘செக்-அப்’

உ.பி. உள்ளிட்ட வட மாநிலங்களில் கோயில்களிலுள்ள கடவுள்களுக்கு ‘ஷொட்டர்கள்’ போடப்பட்டுள்ளதாம். அர்ச்சனை மந்திரங்கள் ஷொட்டர்களுடன் உள்ள கடவுள்களுக்கு நடக்கிறதாம். கோடை காலத்தில் குளிர் சாதன வசதிகளை செய்ததாகவும், காற்று மாசுபாடு இருந்த காலத்தில் அதைத் தடுக்கும் கவசங்கள் அணிவிக்கப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

கடவுள் சிலைகளுக்கு உயிர் இருப்பதால் இந்த பாதுகாப்புகள் தேவைப்படுகிறது என்று ஒரு வேத பண்டிதர் சமாதானம் கூறுகிறார். கடவுளுக்கும் உயிர் இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டாலும் அனைத்து உயிர்களையும் படைத்ததாக இவர்கள் கூறும் கடவுளின் உயிர், மனித உயிர்களைப் போன்றதுதானா என்று பகுத்தறிவாளர்கள் கேட்கவே செய்வார்கள். மனிதன் கடவுளை தன்னைப் போலவே கருதி தனது பண்புகளை கடவுள் மீது திணித்து விட்டான், ஜாதி உட்பட! எனவேதான் கடவுள் மனிதனின் கற்பனை என்று பகுத்தறிவாளர்கள் கூறுகிறார்கள்.

மனிதன் காட்டுமிராண்டியாக வாழ்ந்த காலத்தில் அச்சத்தின் காரணமாக கடவுள் என்ற கற்பனையை உருவாக்கிக் கொண்டான் என்பதால் கடவுளைக் கற்பித்தவன் முட்டாள் என்றார் பெரியார். இது ஏதோ கடவுள் நம்பிக்கையாளர்களைப் புண்படுத்துவதாக புலம்புகிறார்கள். மனிதர்களைப் போலவே கடவுளுக்கும் உயிர் இருக்கிறது என்று பேசும் புரோகிதர்கள், இனி ஒவ்வொரு கடவுளுக்கும் புரோகிதர்களைத் தவிர கூடுதலாக செலவு பற்றி கவலைப்படாமல் மருத்துவ ஆலோசகர்களையும் நியமித்து கடவுளின் உடல்நலனைக் கண்காணித்து வரலாம். அவசர சிகிச்சை தேவைப்பட்டால் மருத்துவமனைகளிலும் சேர்க்கலாம். மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழும் கடவுளர்களைக் கொண்டு வரலாம் என்பது அடியேனின் யோசனை.

உ.பி.யில் முதல்வராக இருக்கும் ஆதித்ய நாத் என்ற காவிச் சாமியார் அம்மாநில மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு ஆன்மிக வகுப்புகளை நடத்தத் திட்டமிட்டுள்ளாராம். அதற்கு முன்பு கடவுள்களுக்கு அதே மருத்துவர் களைக் கொண்டு மருத்துவ சேவைகள் கிடைக்க ஏற்பாடு செய்வது நல்லதுதானே.

**ராமன் வேடம் போட்டு பிச்சை எடுத்தால் சிறை**

உ.பி. மாநிலத்தில் கோயில் ஒன்றில் ஒருவர் இராமன் வேடம் போட்டு பிச்சை எடுத்து வந்தார் என்பதற்காக பஜ்ரங்தள் என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் அவரை அடித்து உதைத்து காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். காவல்துறை அவர் மீது வழக்குகளைப் பதிவு செய்து சிறையில் அடைத்துவிட்டது. ராமன் வேடம்போட்டு பிச்சை எடுக்கக் கூடாது என்ற ‘தன்மான’ப் பிரச்சினைக்காக இவர்கள் எதிர்க்கவில்லை. வேடம் போட்டவர் ஒரு முஸ்லிம். நாடக நடிகர். நடிப்புத் தொழில் இல்லாதபோது குடும்பத்தைக் காப்பாற்ற ‘ராமன்’ வேடம் போட்டு பிச்சை எடுப்பது அவரது வழக்கமாம். ஒரு இஸ்லாமியர் பிச்சை எடுப்பதற்குக்கூட ராமன் வேடம் போடக் கூடாது என்கிறது ‘பஜ்ரங்தள். “கடவுள் வேடம் போட்டு பிச்சை எடுக்கும் உரிமை இந்துக்களுக்கு மட்டுமே உண்டு; இது இந்து நாடு; எங்கள் நாடு” என்று பொங்குகிறார்கள்.

ஆனால், இந்தியாவை தாய்நாடாக ஏற்றுக் கொண்டு வாழ்கிறவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் முஸ்லிம்களாக இருந்தாலும் ‘இந்து’க்கள்தான் என்கிறார், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத். அந்த ‘இந்துத்துவ’ கொள்கை எல்லாம் ‘பஜ்ரங்தள்’ கும்பலுக்கு தெரியாது. ‘முஸ்லிம் என்றால் அடி; உதை’ என்பதே இவர்களுக்கான ‘ஆன்மீகம்’. ‘இந்து ராஷ்டிரம்’ என்ற இராம இராஜ்யத்தில் பிச்சைக்காரர்களே இருக்க மாட்டார்கள் என்றெல்லாம் இவர்கள் கூற மாட்டார்கள். ஒரு இஸ்லாமியர் ராமர் வேடம் போட்டு பிச்சை எடுக்கக் கூடாது என்பதே இவர்களின் ‘இராமராஜ்ய’த்தின் இலட்சியம்.

**– கோடங்குடி மாரிமுத்து**

# குடியுரிமை சட்டங்களைக் கைவிட 106 அதிகாரிகள் மோடிக்கு கடிதம்

திருத்தப்பட்ட குடியுரிமைச் சட்டம் (சிஏஏ) மற்றும் குடிமக்கள் பதிவேடு (என்ஆர்சி), மக்கள்தொகை பதிவேடு (என்பிஆர்) ஆகியவை இந்திய நாட்டிற்கு தேவையற்ற வீணான முயிற்சிகள் என்று ஓய்வுபெற்ற ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் 106 பேர் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளனர். வியாழக்கிழமையன்று எழுதப்பட்ட அந்த கடிதத்தில், இதுதொடர்பாக மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

“இந்திய அரசியலமைப்புக்கு உறுதியளித்த, அகில இந்திய மற்றும் மத்திய சேவைகளின் முன்னாள் அரசு ஊழியர்களை உள்ளடக்கிய அரசியலமைப்பு நடத்தைக் குழுவான நாங்கள், ‘சிஏஏ-என்ஆர்சி-என்பிஆர்’ ஆகிய மூன்று பிரச்சனைகளும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்று உங்களுக்குத் தெரிவிப்பதை எங்களின் கடமையாக கருதுகிறோம். என்பிஆர், சிஏஏ மற்றும் என்ஆர்சி தொடர்பான விவரங்களை உங்களுக்குத் தெரியப்படுத்துவதுடன், இந்த நடவடிக்கைகளை ஏன், உறுதியாக எதிர்க்க வேண்டும் என்பதையும் விளக்க விரும்புகிறோம். சிஏஏ விதிகளின் அரசியலமைப்பு செல்லுபடி தன்மை குறித்து, எங்களுக்குபெரும் அவநம்பிக்கை உள்ளது. அவை தார்மீக ரீதியாக மறுக்க முடியாதவை என்றும் நாங்கள் கருதுகிறோம்.

முஸ்லிம் மதத்தை அதன் நோக்கத்திலிருந்து உணர்வுப் பூர்வமாக விலக்கும்ஒரு சட்டம், இந்தியாவின் மக்கள்தொகையிலுள்ள மிகப்பெரிய பிரிவினருக்கு அச்சங்களை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதையும் நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். பிறப்புப் பதிவுகளை பராமரிப்பதே மோசமாக உள்ள ஒரு நாட்டில், சிஏஏ, என்ஆர்சி போன்றவை சிக்கலை ஏற்படுத்தும். சிஏஏ சட்ட விதிகள், இந்த அரசாங்கத்தின் மிக உயர்ந்த மட்டங்களில் இருந்து, கடந்த சில ஆண்டுகளில் மிகவும் ஆக்ரோஷமான அறிக்கைகளுடன், இந்தியாவின் முஸ்லிம் சமூகத்தில் ஆழ்ந்த அமைதியின்மையை ஏற்படுத்துகின்றன. நாட்டின் பொருளாதார நிலைமை அரசாங்கத்தின் மிக நெருக்கமான கவனத்தை ஈர்க்கும் ஒரு நேரத்தில், குடிமக்களும் அரசாங்கமும் சாலைகளில் மோதலுக்குள் நுழையும் ஒரு சூழ்நிலையை இந்தியா தாங்க முடியாது.இது ஏற்கெனவே ‘லவ் ஜிகாத்’, கால்நடை கடத்தல் மற்றும் மாட்டிறைச்சி நுகர்வு போன்ற பிரச்சனைகளின் மீதான பாகுபாடு மற்றும் குற்றச்சாட்டுக்களின் தொடர்ச்சியாக உள்ளது.

மத்தியில் அதிகாரத்தில் இருக்கும் கட்சியால், உள்ளூர் காவல்துறை கட்டுப்படுத்தப்படும் மாநிலங்களில் மட்டுமே முஸ்லிம் சமூகம், சமீபத்திய நாட்களில் போலீஸ் நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிட்டது என்பது, என்பிஆர், என்ஆர்சி பயன்பாட்டைக் குறிப்பிட்ட சமூகங்கள் மற்றும் தனிநபர்களைக் குறிவைக்கப் பயன்படுத்தப்பட லாம் என்ற பரவலான உணர்வுக்கு நம்பகத் தன்மையைச் சேர்க்கிறது. பெரும்பான்மையான மாநில அரசுகள் என்பிஆர் - என்ஆர்சி-யை செயல்படுத்த விரும்பாத ஒரு சூழ்நிலை இருப்பது விரும்பத்தக்கது அல்ல. இது மத்திய-மாநில உறவுகளில் ஒரு முட்டுக்கட்டைக்கு வழிவகுக்கிறது. இது இந்தியா போன்ற ஒரு கூட்டாட்சி அமைப்பில் மிகவும் முக்கியமான பிரச்சனையாகும்.

எல்லா வற்றிற்கும் மேலாக, இந்தியா சர்வதேச நல்லெண்ணத்தை இழந்து அதன் உடனடி அண்டை நாடுகளை அந்நியப்படுத்தும் அபாயத்தில் இருக்கும் சூழ்நிலையை நாம் காண்கிறோம். துணைக் கண்டத்தில் பாது காப்பு விஷயங்களிலும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.”இவ்வாறு அவர்கள் தங்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

## ‘நிமிர்வோம்’ வாசகர் வட்ட சந்திப்பு : புதிய தோழர்கள் கழகத்தில் இணைந்தனர்

‘நிமிர்வோம்’ நான்காம் ஆண்டு துவக்க விழா மற்றும் நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 12ஆவது சந்திப்பு 04.01.2020 அன்று மாலை 5 மணிக்கு திவிக தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தென் சென்னை மாவட்ட அமைப்பாளர் சுகுமார் தலைமை வகித்தார்.




‘பெரியாரைக் கொச்சைப்படுத்தும் குழப்பவாதிகள்’ நூலை ஆய்வு செய்து, இமானுவேல் துரையும், ‘ஆர்.எஸ்.எஸ் பரப்பும் வதந்திகளும், உண்மைகளும்’ என்ற தலைப்பில் எட்வின் பிரபாகரனும் கருத்துரை வழங்கினர். CAA மற்றும் NRC குறித்து கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் விரிவாக சிறப்புரையாற்றினார். இறுதியாக இசை இனியாழ் நன்றி கூறினார். நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்றார்.

சென்னையைச் சார்ந்த தோழர்கள் அறிவுமதி, ஆதவன், தமிழன்பன், வினோத் ஆகியோர் கழகத்தில் இணைந்தனர்.

## நினைவு நாளில் பெரியார் சிலைகளுக்கு மாலை

**கோவை :** கோவை மாநகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் பெரியார் 46 வது நினைவு நாளில் தலைமை செயற்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் தலைமையில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து, மாநகர துணை தலைவர் வெங்கட் கொள்கை முழக்கங்கள் எழுப்பி, விஷ்ணு உறுதிமொழி வாசிக்க தோழர்கள் அனைவரும் உறுதிமொழி ஏற்று வீரவணக்கம் செலுத்தப்பட்டது. கலந்து கொண்ட அனைத்து தோழர்களுக்கும் சுரேஷ்-தர்ஷினி இணையர் தேனீர் வழங்கினர்.

**சென்னை :** 24.12.2019 அன்று காலை 9 மணிக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் சென்னை சிம்சனில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. உடன் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தென் சென்னை மாவட்ட செயலாளர் வேழவேந்தன், தென் சென்னை மாவட்ட செயலாளர் இரா.உமாபதி, வட சென்னை மாவட்ட செயலாளர் இராஜீ, தென் சென்னை மாவட்ட அமைப்பாளர் சுகுமார் மற்றும் கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

**திருப்பூர் :** திருப்பூர் இரயில் நிலையம் முன்பு உள்ள பெரியார் சிலைக்கு காலை 10 மணியளவில் தி.க, தி.வி.க, த.பெ.தி.க தோழர்கள் இணைந்து மாலை அணிவித்தனர். கழகத் தோழர் திருப்பூர் சரசுவதி மாலை அணிவித்தார்.

**நாமக்கல் :** திருச்செங்கோடு நகர புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பெரியாரின் சிலைக்கு காலை 9 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழக நகர செயலாளர் பூபதி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. உடன் திருச்செங்கோடு நகர கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

**இராசிபுரம் :** இராசிபுரம் நகர திராவிடர் விடுதலைக்கழகத்தின் சார்பில் அத்தனூர் பேரூராட்சி பெரியார் நினைவு சமத்துவபுரத்திலுள்ள பெரியாரின் சிலைக்கு காலை 9 மணியளவில் இராசிபுரம் நகர அமைப்பாளர் பிடல் சேகுவேரா தலைமையில் மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வின் போது, சமத்துவபுரத்தில் வசித்துவரும் அரசன் மாவட்ட பொருளாளர் (விசிக) கலந்து கொண்டார்.

**தென்காசி :** தென்காசி மாவட்ட திராவிடர் விடுதலைக்கழகம் சார்பில் கீழப்பாவூர், பெரியார் திடலில் உள்ள பெரியார் சிலைக்கு மாவட்டத் தலைவர் அ.மாசிலாமணி தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது..

# ஒடுக்கப்பட்ட மக்களின் போராளி - பி.எஸ். கிருஷ்ணன்

இந்திய சமூகத்தில் ஒடுக்கப்படுகிற மக்களுக்கான இணையற்ற போராளி பி.எஸ்.கிருஷ்ணன். 1956-ல் ஐஏஎஸ் அதிகாரியாக ஆந்திர மாநிலத்தில் பதவியேற்றதிலிருந்து, மத்திய அரசின் செயலர் முதற்கொண்ட பல பதவிகளில் பணியாற்றியபோதும், ஓய்வு பெற்ற பின் மறையும் வரையும் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக ஓயாமல் உழைத்தவர். பட்டியல் சாதியினர், பழங்குடியினர், சமூகரீதியாகவும் கல்விரீதியாகவும் பிற்படுத்தப்பட்ட சாதியினர், அந்த சமூகங்களுக் குட்பட்ட மதச் சிறுபான்மையினரின் முன்னேற்றத் துக்காகத் தொடர்ந்து தீவிரமாகச் செயல்பட்டு வந்தவர்.

இந்திய அரசு அதிகாரிகளில் பி.எஸ்.கிருஷ்ணனின் வாழ்வும் பணியும் அரிதினும் அரியவை. பார்ப்பன சமூகத்தில் பிறந்த அவர், சாதிகளை மேலிருந்து கீழ் நோக்கி அடுக்கும் பார்ப்பனியத்துக்கு எதிரான போரில் தன்னை உறுதியான சிப்பாயாக இணைத்துக் கொண்டார். எல்லாச் சமூகங்களும் சம இடம் நோக்கி நகர கீழேயுள்ள சமூகங்கள் மேல் நோக்கி வருவதற்கான இடங்களை உருவாக்குவதும் அதற்கான தடைகளை உடைப்பதும் முக்கியம் என்று கருதிச் செயல்பட்டார்.

“சாதி அமைப்பு இந்தியக் கலாச்சாரத்தின் கொடிய குற்றம்” என்பது அவரது அடிப்படைக் கருத்து. சமூகநீதி, தீண்டாமை, சாதிய அமைப்புக்கு எதிரான கடும் எதிர்ப்பு என்ற சமரசமற்ற சித்தாந் தத்துடன்தான் ஆட்சிப் பணியில் நுழைந்ததாகக் கூறியிருக்கிறார். அம்பேத்கர், காந்தி, நாராயண குரு, விவேகானந்தர், பெரியார், மார்க்ஸின் சித்தாந்தகளி லிருந்து வடித்தெடுத்ததுதான் தனது சித்தாந்தம் என்பார்.

### உள்ளிருந்தே எதிர்த்தவர்

அரசையும் நிர்வாக இயந்திரத்தையும் ஒடுக்கப்பட்ட சமூகங்களிடம் போய்ச்சேர்கிற, செயலூக்கமுள்ள கருவியாக மாற்றுவதற்கு அவர் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டார். சாதி - வர்க்க சமூகத்தின் கட்டமைப்பையும், இந்த அநீதியான அமைப்பை எவ்வாறு அரசாங்கங்கள் பாதுகாக்கின்றன என்பதையும், இந்த அமைப்புக்குள் பணியாற்றிக் கொண்டே எப்படி அவற்றை எதிர் கொள்வது என்பதையும் தன் பணிக்காலத்தின் பெரும் பாடமாக அளித்திருக்கிறார்.

ஜனநாயகத்தின் காவலர்களாகப் பணியாற்ற வேண்டியவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கான நிர்வாக அறத்தை அவர் மற்றவர் களுக்கு வழங்கினார். அவர் கைகொண்ட புதுமையான நிர்வாக முறைகளும், புரையோடிப் போன சமூக அமைப்பின் மீதான தாக்குதலும் உயர் அதிகாரிகளின் கோபத்துக்கு உள்ளாகின. மேலதிகாரி களால் பல முறை கிருஷ்ணன் பழிவாங்கப்பட்டார். பந்தாடப்பட்டார்.

இளம் ஐஏஎஸ் அதிகாரியாக ஆந்திரப் பிரதேசத்தில் பணிபுரிந்தபோது, 1957-லேயே பட்டியலின மக்களின் சேரிகள், பழங்குடியினர் கிராமங்கள், பின்தங்கிய உழைப்போர் வசிக்கும் பகுதிகளில் அரசாங்க முகாம்களை நடத்தினார்; அதன் மூலம் இத்தகைய ஒடுக்கப்பட்டோருக்குத் தன்னம்பிக்கையும் கௌரவமும் அளித்தார். நிலமற்றவருக்கும் வீடற்றவருக்கும் விளை நிலங் களையும் வீட்டுமனைகளையும் விநியோகிக்கும் பிரம்மாண்டத் திட்டங்களைத் தொடங்கி நிறைவேற்றினார். இவையெல்லாம் ஆந்திரப் பிரதேச நிர்வாகத்தில் முக்கியமான மைல்கற்கள்.

ஒடுக்கப்பட்ட சாதியினரின் முழுமையான வளர்ச்சிக்கு இவர்களையெல்லாம் சமூகரீதியாக முன்னேறிய சாதிகளின் தற்போதைய வளர்ச்சிக்கு நிகராக உயர்த்த வேண்டும். அதை நிறைவேற்ற ஒருங்கிணைந்த சட்ட திட்டங்கள் தேவை. குறிப்பாக, தலித் மக்களுக்கான சிறப்புக்கூறு திட்டத்துக்கும், பழங்குடி மக்களுக்கான துணைத் திட்டத்துக்கும் தேசிய அளவிலும் மாநிலங்கள் அளவிலும் சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். அவற்றை அமலாக்குவதற்கான அதிகார நிறுவனங்களை அமைக்க வேண்டும். அத்தகைய பணிகளைச் செய்வதற்கான ஒரு செயல் திட்டத்தை கிருஷ்ணன் உருவாக்கியிருக்கிறார். தனது இளைய கூட்டாளி களோடும் சமூக ஊழியர்களோடும் இணைந்து இந்தச் செயல் திட்டத்தை மத்திய மற்றும் மாநில அரசுகளிடம் வலியுறுத்திக்கொண்டிருந்தார்.

### கிருஷ்ணனின் பெருங்கனவுகள்

பல சட்டங்களும், அரசியல் சாசனத் திருத்தங் களும் கிருஷ்ணனின் கனவில் உதித்து, கரங்களில் வடிவம் பெற்றவை. அப்பட்டியல் நீளமானது.



பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்துக்கு அரசியல் சாசன அங்கீகாரம் வழங்க வழி வகுக்கும் 65 ஆவது அரசியல் சாசனத் திருத்த சட்டம் - 1990, புத்த மதத்தில் இணைந்த தலித் துகளைப் பட்டியல் சாதி யினர் என்று அங்கீகரிப் பதற்கான சட்டம், வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் - 1989, பிறகு அதன் திருத்தச் சட்டம் 2015, மனித கழிவகற்று வோரைப் பணியமர்த்தல் மற்றும் உலர்கழிப்பறைகள் கட்டுதல் தடுப்புச் சட்டம் 1993, பிறகு அதன் மேம்பட்ட வடிவமான அவர்களின் மறு வாழ்வுக்கான சட்டம் 2013 என அது நீள்கிறது.

பட்டியல் சாதியினருக்கான சிறப்பு உட்கூறுத் திட்டம் 1978, மாநிலங்களின் சிறப்பு உட்கூறுத் திட்டங்களுக்கான மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு, மாநிலங்களின் பட்டியல் சாதியினர் வளர்ச்சி கார்ப்பரேஷனுக்கான மத்திய அரசின் நிதி உதவித் திட்டம் போன்ற பல திட்டங்களின் கர்த்தாவும் அவரே.

நீதிமன்றத்திலும் அவரது பணி தொடர்ந்தது. மத்திய நல்வாழ்வுத் துறையின் செயலாளராக 1990-ல் பணியாற்றியபோது ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு நீண்ட காலமாக மறுக்கப்பட்டுவந்த தேசிய அளவிலான அங்கீகாரத்தையும் இடஒதுக்கீட்டை யும் வழங்க வேண்டும் என்று அவர் மத்திய அரசை அறிவுறுத்தி இணங்க வைத்தார்.

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றும் அந்தத் திட்டத்தை வி.பி.சிங் அரசு கொண்டுவந்ததன் பின்னணியில் அவரது அபார முயற்சிகள் இருந்தன. அந்த இடஒதுக்கீட்டை எதிர்த்து வழக்குகள் போடப்பட்டன. அதைப் பாதுகாப்பதற்கான முக்கியமான அடிப்படைகளை அமைத்து அவர் உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசின் வாதத்தை வெற்றி பெற வைத்தார். இடஒதுக்கீட்டுக்கான சட்டரீதியான அடித்தளத்தை இதன் மூலம் உருவாக்கினார்.

கல்வி நிறுவனங்களில் பட்டியல் சாதியினர், பழங்குடிகள், பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டத்தை மத்திய அரசு அறிவித்தபோது அதை எதிர்த்த வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நடந்தன. அப்போது மத்திய அரசு 2006இல் பி.எஸ்.கிருஷ்ணனின் உதவியை நாடியது. அவரது பணிகளின் மூலமாக அந்த இட ஒதுக்கீட்டுக்கு அரசியல் சாசன ரீதியான அடிப்படை இருக்கிறது என்று 2008இல் உச்ச நீதிமன்றம் அறிவிக்கும் நிலை ஏற்பட்டது.

இஸ்லாமியர்களில் சமூகரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரை இனம் கண்டறிவதற்கான ஆலோசகராகப் பணியாற்ற வேண்டுமென ஆந்திர அரசு அவரை 2007இல் கேட்டுக்கொண்டது. அவரது அறிவியல்பூர்வமான பகுப்பாய்வின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியருக்கு 4% இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை ஆந்திர அரசு இயற்றியது. அச் சட்டத்துக்கு எதிரான வழக்குகள் ஆந்திராவின் உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் நடந்தபோது அவற்றை எதிர்கொண்டு ஆந்திராவின் சட்டத்தை வெற்றிபெற வைக்கும் பணிகளையும் அவர் செய்தார்.

### வர்ண–வர்க்க சங்கமம்

இந்திய சமூகத்தின் ஆதார அமைப்பு வர்ணமா, வர்க்கமா என்ற விவாதங்களைத் தாண்டி வர வேண்டும் என்று கருதினார். மார்க்ஸியமும் தலித்தியமும் சங்கமிக்க வேண்டும் என்றார். வர்ண-வர்க்க அடித்தட்டினரை இணைக்கும் முயற்சிகள் தொடங்க வேண்டும் என்றார். பிற்படுத்தப்பட்ட சாதிகளிலும் நிலமற்ற விவசாயிகளும், ஏராளமான கைவினைஞர், சேவை சாதிகளைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். இவர்களையும் தலித்துகளையும் ஒன்றாக இணைக்க வேண்டும். அதுவே வர்ண-வர்க்க சங்கமமாகும்.

இந்த இணைப்பு நிலமற்ற அனைவருக்குமான நில விநியோகத்துடன் தொடங்க வேண்டும் என்று கருதினார்.

சமூகநீதி குறித்த நூல்கள், ஆவணங்கள், கட்டுரைகள், வரைவுகள் பல அவர் எழுதியுள்ளார். எண்பது வயதைத் தாண்டிய பிறகும், தனது இளைய தலைமுறை நண்பர்களுடனும் சமூக ஊழியர்களோ டும் இணைந்து கடுமையாகப் பணியாற்றி வந்தார்.

அதற்காக இறுதி வரை நாடு முழுதும் பயணித்து வந்தார். நீதியின் மீதும், மனித உரிமைகள் மீதும், இந்திய அரசியல் சாசனத்தின் லட்சியக் கண்ணோட் டத்தின் மீதும், அனைத்து இந்தியர்களின் சமூக ரீதியான, பொருளாதாரரீதியான முன்னேற்றத்தின் மீதும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு கிருஷ்ணனின் மறைவு ஈடு செய்யவியலா இழப்பு. அவரது இலட் சியங்களை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவது தான் நாம் அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலி!

**– வே.வசந்தி தேவி**
**முன்னாள் துணைவேந்தர்**
**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**
**(‘தமிழ் இந்து’ ஏட்டில் எழுதிய கட்டுரை)**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 16.01.2020**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அன்னியர்கள் என்பதை கண்டறிவதற்காக அரசு செலவிட்ட தொகை 1600 கோடி ரூபாய். அதில் பல்வேறு குளறுபடிகள் நடந்தன. அந்த குளறுபடிகளிலேகூட இந்தியாவினுடைய குடியரசுத் தலைவராக இருந்த பக்ருதின் அலி அகமதினுடைய சகோதரர்கள் இந்தியாவின் குடிமக்கள் அல்ல என்று சட்டவிரோத குடியேற்றப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கார்கில் போராட்டத்தில் பங்கெடுத்து, அதற்காக குடியரசுத் தலைவரிடம் விருதைப் பெற்ற இஸ்லாமிய குடும்பம் சட்ட விரோதமாக குடியேறியவர்கள் பட்டியலில் சேர்த்து ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பட்டியல் தயாரிப்பதில் பல குளறுபடிகள் நடந்ததை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உச்ச நீதிமன்றம் இதில் தலையிட்டு உச்ச நீதிமன்றம் கண்காணிப்பின் கீழ் பட்டியல் தயாரிக்கப்பட்டு 16 இலட்சம் பேர் இன்றைக்கு சட்ட விரோதமாக குடியேறியவர்கள் என்று இறுதி செய்யப்பட்டது. சரி இந்த சட்ட விரோதமாக குடியேறியவர்களை என்ன செய்யலாம்? திரும்பவும் பங்களாதேஷிற்கு அனுப்பினால் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அவர்களுக்காக நாங்கள் ஒரு தடுப்புக் காவல் முகாம்களை ஏற்படுத்தப் போகிறோம். (சிறைச் சாலை). அந்த சிறைச்சாலையில் கொண்டு போய் இவர்களை அடைத்து வைக்கப் போகிறோம் என்கிறார்கள். எத்தனை காலம் அடைத்து வைப்பீர்கள்? அவர் களின் பேரன், கொள்ளுப்பேரன் என்று தலைமுறை தலைமுறையாக வாழ்கிறவர்களை தடுப்புக் காவல் முகாம்களில் வைத்திருக்கப் போகிறார்களாம்.

அசாம் சட்டசபைக்கு தேர்தல் வந்தபோது பாரதிய ஜனதா கட்சியின் அமித்ஷா, ‘நாங்கள் அன்னியர்களை இங்கிருந்து விலக்கி வைத்து விட்டோம், உங்களுடைய அசாம் மக்களுடைய உரிமைகளைக் காப்பாற்றி விட்டோம். இது எங்களுடைய ஆட்சி உங்களுக்கு செய்திருக்கிற சேவை, எனவே உங்களுடைய வாக்குகளை எங்களுக்கு அளியுங்கள்’ என்று சொல்லி ஓட்டுகள் வாங்கி அசாம் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி பெரிய வெற்றியைப் பெற்று விட்டது. அதன்பின் அமித்ஷா சொன்னார்’ இந்த தேசியக் குடியுரிமை பதிவேடு என்பது அசாம் மாநிலத்திற்கு மட்டுமல்ல இந்தியாவில் உள்ள ஒவ்வோரு மாநிலத்திலும் சட்ட விரோதமாக குடியேறியவர்கள் யார் யார் இருக்கிறார்கள் என்பதை கண்டறிவதற்கான பதிவேடுகளை நாங்கள் தயாரிப்போம். ஒரு அன்னியனைக் கூட இந்தியாவில் ஊடுருவதை அனுமதிக்க முடியாது’ என்ற உறுதி மொழியை அமித் ஷா அப்போது அங்கே கொடுத்தார். அசாம் போன்ற வடகிழக்கு மாநிலங் களில் இத்தகைய குடியுரிமைப் பதிவேடுகளைத் தயாரிக்க வேண்டிய அவசியம் இருக்கலாம். அதை ஒரு சாக்காக முன் வைத்து இந்தியா முழுமைக்கும் ஏன்குடியுரிமைப் பதிவேடுகளைத் தயாரிக்க வேண்டும்? அதற்காக பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் பணத்தை ஏன் விரயம் செய்ய வேண்டும்? இதுதான் இப்போது நாடு முழுதும் போராடுகிற மக்களிடம் எழுந்துள்ள நியாயமான அச்சம். இந்த அச்சத்தை உறுதிப்படுத்துகிறது, நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா கொண்டு வந்து நிறைவேற்றியுள்ள ‘குடியுரிமை திருத்தச் சட்டம்.’

திருத்தச் சட்டம் என்ன சொல்ல வருகிறதென்றால், 2014ஆம் ஆண்டு வரை இந்தியாவில் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் இந்த மூன்று நாடுகளிலிருந்து இந்தியாவிற்குள் அடைக்கலம் தேடி வந்தவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும். அப்படி குடியுரிமை வழங்குவதற்கு உரிமை படைத்தவர்கள் யாரென்று சொன்னால் இந்துக்கள், சீக்கியர்கள், பாரசீகர்கள், சமணர்கள், பவுத்தர்கள் என்று ஆறு பிரிவினர் மட்டும். இந்த சட்டத் திருத்தத்தில் மதத்தின் அடிப்படையில் குடியுரிமை வழங்கப்படுவது சரியானதா? இது தான் முக்கிய கேள்வி. இந்தியாவினுடைய அரசியல் சட்டத்தின் 14ஆவது பிரிவு, ‘இந்தியாவில் வாழ்கிற எந்த மக்களையும் மதத்தின் அடிப்படையில் பிளவுபடுத்தக்கூடாது’ என்று அது திட்டவட்டமாக கூறுகிறது. எனவே திருத்தம் அரசியல் சட்டத்துக்கு எதிரானது.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழகத் தோழர்களே!

கழக ஏடுகளான ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’, ‘நிமிர்வோம்’ மாத இதழ்களுக்கு உறுப்பினர் சேர்க்கையைத் தொடங்கி விட்டீர்களா?

கழகத்தின் களப் பணிகளை ஆதரவாளர்களிடம் கொண்டு சேர்க்கும் ஏடு ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’, வாரம் தோறும் நடக்கும் நிகழ்வுகளை பெரியாரியல் பார்வையில் பதிவு செய்து வருகிறது.

பெரியாரியல் குறித்த ஆழமான கட்டுரைகள், சமூகம், சுற்றுச் சூழல், கலை, இலக்கியம் குறித்த விரிவான கட்டுரைகளுடன் வெளி வருகிறது ‘நிமிர்வோம்’.

தேர்தல் அரசியலில் பங்கெடுக்காத ஒரு சமுதாய இயக்கம், 2002ஆம் ஆண்டிலிருந்து 17 ஆண்டுகளாக வாரந்தோறும் பெரியார் முழக்கத்தையும், மூன்று ஆண்டுகளாக மாதந்தோறும் ‘நிமிர்வோம்’ இதழையும் இடைநிறுத்தமின்றி நடத்தி வருகிறது. அரசியல் கட்சிகளால்கூட ஏடு நடத்த முடியாத நிலையில் திராவிடர் விடுதலைக் கழகம் இந்தப் பணியை தொய்வின்றி செயல்படுத்தி வருகிறது.

தோழர்கள் இது குறித்த கவலை புரிதலுடன் களமிறங்கினால் ஏடுகளின் எண்ணிக்கையை மேலும் உயர்த்த முடியும் என்று உறுதியாக நம்புகிறோம்.

தோழர்களே! விரைந்து கழக ஏடுகள் தொடர்ந்து வெளிவர சந்தா சேர்ப்பு இயக்கத்தைத் துரிதப்படுத்துங்கள்!

# ‘ஜே.என்.யூ’ வன்முறைக் கும்பலைக் கைது செய்: கோவையில் மாணவர்கள் போர்க் கொடி




தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு சார்பாக கோவை பந்தயச் சாலையில் 10.01.2020 அன்று மாலை 4 மணியளவில், புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்திய ‘வன்முறை’யாளர்களை உடனே கைது செய்ய வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு மாணவர் கழகம் கனல்மதி ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார். சபரி கிரி (தமிழ்நாடு மாணவர் கழகம்), தினேசு (இந்திய மாணவர் மன்றம்), சம்சீர் அகமது மாநில அமைப்பாளர் (இந்திய மாணவர் ஜனநாயக சங்கம்), பூர்ணிமா (அனைத்திந்திய மாணவர் பெருமன்றம்), சந்தோஷ் (தமிழ்நாடு மாணவர் கழகம்), அபுதாகீர் (Campus), சண்முகவேல் பிரபு (தமிழ்நாடு மாணவர் மன்றம்), சௌந்தர் (தமிழ்நாடு மாணவர் கழகம்), பிரசாந்த் (தமிழ்நாடு மாணவர் கழகம்) ஆகியோர் தங்களது கண்டனங்களை பதிவு செய்தனர்.

தமிழ்நாடு மாணவர் கழகம் ஒருங்கிணைத்த ஆர்பாட்டத்தில், இந்திய ஜனநாயக மாணவர் சங்கம், இந்திய மாணவர் சங்கம், தமிழ்நாடு மாணவர் மன்றம் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த மாணவர்களோடு தன்னெழுச்சியாகவும் 70-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## கல்லக்குறிச்சியில் கழகம் தடைமீறி ஆர்ப்பாட்டம்




இசுலாமியர்களையும் ஈழத்தமிழர்களையும் பாதிக்கின்ற குடியுரிமை சட்டத்தை திரும்பப் பெறக் கோரி கல்லக்குறிச்சி மாவட்டம் மூங்கில்துறைப்பட்டு ஊராட்சி மும்முனை சந்திப்பில் 08.01.2020 அன்று 4 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கண்டன ஆர்பாட்டம் நடந்தது. காவல்துறையில் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் தடையை மீறி நடந்தது. கார்மேகம் ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை வகித்தார். கல்லை மாவட்டச் செயலாளர் க.இராமர், மாவட்டத் தலைவர் க. மதியழகன், மாவட்ட அமைப்பாளர் சி. சாமிதுரை, பெரியார் வெங்கட் ஆகியோர் கண்டன உரையாற்றினர். குமார், அன்பு, துளசிராசா, வீரமணி, சங்கர், கழகத்தில் புதிதாக இணைந்துள்ள நாராயண குப்பம் இராசா உள்ளிட்ட முப்பதிற்கும் மேலான கழகத் தோழர்கள் ஆர்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## கழக செயல்பாடுகளை தீவிரப்படுத்துகிறது, சேலம் மாவட்டக் கழகம்



05.01.2020 அன்று காலை 11 மணியளவில் கழகத்தின் பொறுப்பாளர்களுக்கான கலந்துரையாடல் கூட்டம் சேலம் தாதகாப்பட்டி சாலையில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் க. சக்திவேல் தலைமையிலும், மாவட்டச் செயலாளர் இரா. டேவிட் முன்னிலையிலும் நடைபெற்றது.

அதில் இயக்கத்தின் செயல்பாடுகளை முடுக்கிவிடும் விதமாக முதலாவதாக ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ மற்றும் ‘நிமிர்வோம்’ இதழ்களுக்கான சந்தா சேர்ப்புகளை துரிதப்படுத்தி ஜனவரி மாத இறுதிக்குள் ஒப்படைக்க வேண்டும் எனவும், கிழக்கு மாவட்டம் முழுதுமாக தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவதெனவும், தெருமுனை பிரச்சாரத்துக்காக ஒலிபெருக்கியுடன் கூடிய மேடை வடிவமைப்போடு சொந்தமாக பிரச்சார வேன் (மஹேந்திர வேன்) ஒன்று வாங்கவும் பொறுப்பாளர்களின் ஒருமித்த கருத்தோடு முடிவெடுக்கப்பட்டது.

### கழகக் கொடி தேவைப்படுவோருக்கு...

பேரணிகளில் பிடித்துச் செல்வதற்கு ஏதுவான திராவிடர் விடுதலைக் கழகக் கொடிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் தோழர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண் : 9841653200

கொடி அளவு : 4 அடி உயரம் 1.5 அடி அகலம்

குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே உள்ளது. ஒரு கொடியின் விலை: ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)

### மணமகள் தேவை

பெயர் : ஆ.லட்சுமணன்

படிப்பு : B.Sc (Psychology)

வேலை: Medical Representative (மருந்து விற்பனை பிரிவு)

பிறந்த நாள்: 3.01.1985

ஊர் : கோபிசெட்டிபாளையம்

வருமானம் : 27000/-

ஜாதி மதம் தடையில்லை, +2 அல்லது ஒரு டிகிரி முடித்த பெண் தேவை...

தொடர்புக்கு : 9788282126

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
சிந்தாமணி சில்க்ஸ்
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர் & மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 16th January 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN